## கல்கமுவ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 11 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கல்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை கடைவாடகை மீதி ரூபா 882,766 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 496,993 என காட்டப்பட்டுள்ளமையால் கடன்பட்டோர் ரூபா 385,773 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆண்டின் போது முன் கொடுப்பனவு அடிப்படையில் கேள்வி கோரப்பட்டு வழங்கியிருந்த கல்கமுவ பொதுச் சந்தையை சேர்ந்த 09 கடைகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,242,522 இற்கான நிலுவை தொகை, கடன்பட்டோர் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் பஸ் நிலைய மேல்மாடியில் 8 கடைகளுக்கு மற்றும் தரை மாடியில் 17 கடைகளுக்கு பில் போடப்பட வேண்டிய முன் கொடுப்பனவு தொகை முறையே ரூபா 4,440,000 தொகையும் மற்றும் ரூபா 2,312,915 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை முறையே ரூபா 4,028,750 மற்றும் ரூபா 4,868,165 தொகை என எடுக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மூலதன வருமானம் ரூபா 2,144,000 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) வருட இறுதியில் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,127,034 தொகையினை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன், ஆண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 92,356 இற்கான தவணைப் பணத்தினை செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் இரண்டு ஊழியர்களின் ஜூன் மாத சம்பள தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 39,040 இற்கான சம்பள மீளளிப்புத் தொகை வருட இறுதியில் பெற வேண்டிய சம்பள மீளளிப்பு தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்து வேண்டிய மீதி மற்றும் அதனொடு நேரொத்த பேரேட்டு கணக்கின் மீதி இடையே காணப்பட்ட ரூபா 376,156 இற்கான வித்தியாசத்தை சரி செய்வதற்காக அத்தொகையை திரண்ட நிதியம் வரவு வைப்பதற்கு பதிலாக ஆண்டிற்கான வட்டி செலவுகள் கணக்கு வரவு வைத்ததன் காரணமாக ஆண்டிற்கான செலவுகள் ரூபா 376,156 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் தொடர்பாக ஆண்டிற்கான வட்டி செலவு ரூபா 1,836,266 தொகை எனினும் வருமானச் செலவுக் கணக்குகளின் அவை ரூபா 1,166,181 தொகை என எடுக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வட்டிச் செலவு ரூபா 670,085 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதி காலாண்டு தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 445,692 வட்டி தொகையினை செலுத்தப்பட வேண்டிய வட்டி என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் உள்நாட்டு கடன்கள் அபிவிருத்தி நிதியத்தின் மீதியை உறுதிப்படுத்திய சான்றிதழ் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய கடன்மீதி ரூபா 20,210,723 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 19,960,363 என காட்டப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோர் ரூபா 250,360 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2012 ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாத ரூபா 1,400,620 இற்கான JCB இயந்திரம் வாடகை கடன்பட்டோர் பெறுமதி மீளாய்வாண்டிற்கான வாடகை கணக்கிற்கு செலவு வைத்துள்ளமையால் ஆண்டிற்கான வாடகை வருமானம் அதே தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டிற்கான JCB இயந்திரம் வாடகை கடன் பட்டோர் ரூபா 2,440,862 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது தகர்க்கும் ரோல் கடன் பட்டோரிடம் பெறுவனவுகள் ரூபா 226,038 எனினும், கடன் பட்டோருக்காக மிகையாக ஒதுக்கியதை சரி செய்வதற்காக 39 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 1,829,126 தொகை ஒன்று கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைத்து இயந்திர வாடகை கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 1,603,088 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல் 38 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் மீளாய்வாண்டிற்கான தகர்க்கும் ரோல் கடன் பட்டோர் கணக்கினை கணக்கீடு செய்யும் போது ரூபா 202,465 இற்கான பழைய மீதி ஒன்றும் உட்பட ரூபா 834,794 தொகை ஒன்று கடன்பட்டோர் வரவு வைத்து இயந்திர வாடகை கணக்கு செலவு வைக்கப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 202,465 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாத ரூபா 2,636,302 தொகை ஒன்று வருட இறுதியில் கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 02 சந்தர்ப்பங்களில் பணம் வெளிச் செல்லல் என காட்ட வேண்டிய ரூபா 12,817,239 தொகையொன்று பணம் உள்வருதல் எனவும் 01 சந்தாப் பணம் உள்வருதல் எனக் காட்டப்பட வேண்டிய ரூபா 3,472,852 தொகை பணம் வெளிச் செல்லல் எனக் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அதே போல் 02 சந்தர்ப்பங்களில் காசு வெளிச் செல்லல் என காட்டப்பட வேண்டிய ரூபா 8,878,337 இற்கான தொகையொன்று மற்றும் 02 சந்தர்ப்பங்களின் பணம் உள்வருதல் காட்டப்பட வேண்டிய ரூபா 11,058,378 தொகைகள் காசு பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 6 சந்தர்பங்களில் தீர்க்கப்பட வேண்டிய முற்பணம் ரூபா 42,000 வருட இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணம் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,127,034 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பில் போடப்பட்டவைகள் மற்றும் இறுதி மீதியின் கீழ் 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் நேரோத்த பெறுமதிகளிடையே ரூபா 1,666,746 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 69,196,225 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 12,360,472 தொகை தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 96,201,336 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 69,624,604 தொகை தொடர்பாக காலப் பகுப்பாய்வு சமர்பித்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 11,005,975 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவாகக் கணக்காய்வு செய்ய முடியவில்லை.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,715,293 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,503,440 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 23,788,147 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 42,728,377 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 41,956,864 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 8,486,806 வரை அதிகரித்திருந்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 57,898,238 இல் நூற்றிற்கு 50 ஆகிய ரூபா 29,044,309 தொகை உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 42,728,377 இற்கான தொகை மகநெகும, கமநெகும தேசத்திற்கு மகுடம், வயம்ப புபுதுவ போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணத்தினை அடங்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 50,182,945 இல் நூற்றிற்கு 50 ஆகிய ரூபா 25,301,194 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 90 ஆகிய ரூபா 22,889,979 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்த வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 41,956,864 இல் நூற்றிற்கு 7 ஆகிய ரூபா 3,100,000 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியின் நூற்றிற்கு 93 ஆகிய ரூபா 38,856,864 தொகை மகநெகும, கமநெகும, வயம்ப புபுதுவ, தேசத்திற்கு மகுடம் ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

--------------------------------------------------------------

இலக்கம் 0003859214 கொண்ட பொதுக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் ஒரு வருடத்தை விட கூடிய காலம் முதல் காணப்படும் ரூபா 149,970 இற்கான மீதியொன்று வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது காசேட்டு மீதியில் இருந்து கழித்து காட்டப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றில் அதனை தீர்த்திருக்கவில்லை. அதே போல் 2013 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் காணப்பட்ட 06 மாதங்களை விஞ்சிய ரூபா 32,788 பெறுமதியான வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 12 காசோலைகள் தொடர்பாக 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.4 வருமான நிருவாகம்

--------------------------------

2.4.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

---------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வாணிப வரி, கடை வாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக குறிப்பிட்ட அதிகாரம் காணப்படாத போதும் சபையின் வருமான சேகரிப்பவர்களினால் ஆண்டு பூராகவும் வீதவரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் போன்ற வருமானங்களும் வெளிக்களத்தில் சேகரித்திருந்தனர்.

2.4.2 வீதவரி

-----------

நிலுவை வீதவரி சேகரிக்கும் போது ஆணமடுவ பாதையில் 20 அலகுகள் தொடர்பாக ரூபா 10,651 இற்கு மாத்திரம் 2013 ஆண்டு அக்டோபர் மாதத்தில் இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய நிலுவை வரிகளை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அதே போல் 362 வீதவரி அலகுகள் தொடர்பாக மேற்கொள்ப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் நிகவெவ பாதை இடது/வலது மற்றும் ஆணமடுவ பாதையில் ஒரு வருடத்தை மிகைத்த காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படும் 35 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 88,124 நிலுவை ஒன்று இனங் காணக் கூடியதாக காணப்பட்டது.

2.4.3 வாடகை

-------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனங்கள் வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக 1994 ஆண்டு தொடர்பாக ரூபா 48,715 தொகை ஒன்றும், 2009 ஆண்டு தொடர்பாக ரூபா 16,755 தொகையொன்றும் 2011 ஆண்டு தொடர்பாக ரூபா 414,866 உம் மற்றும் 2012 ஆண்டு தொடர்பாக ரூபா 214,492 தொகை ஒன்றும் ஆக மொத்தம் ரூபா 694,828 இற்கான நிலுவை வாடகை மீதி ஒன்று காணப்பட்டது.

(ஆ) முற்கொடுப்பனவு அடிப்படையில் பழைய வாடகையாளருக்கு வழங்கியிருந்த கல்கமுவ பொது சந்தையின் 22 கடைகளில் 21 தொடர்பாக மாதாந்த தவணைப் பணம் 3 முதல் 22 வரை வீச்சில் கூட்டுப் பெறுமதி ரூபா 472,800 நிலுவை கடை வாடகையும் கல்கமுவ பஸ் நிலைய கீழ் மாடியில் 13 கடைகள் தொடர்பாக ரூபா 94,000 நிலுவை கடை வாடகை ஒன்று காணப்பட்டது.

2.4.4 வாணிப வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 59 முதல் 67 வரை காணப்படும் விதிகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 150(1) மற்றும் 152(1) இன் பிரகாரம், கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கட்டு செயலாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும். அதே போல் சபையினால் விதிக்கப்பட்ட வரியினை 7 நாட்களில் செலுத்துமாறு பி.ச. 26 படிவத்தின்

மூலம் குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட வேண்டும் எனினும் சபையினால் அவ்வாறு செய்திருக்கவில்லை.

2.4.5 இயந்திர வாடகை

----------------------------

சபைக்கு சொந்தமான மோட்டார் கிரேடர் இயந்திரம் வாடகைக்கு கொடுத்ததன் மீது 2009 முதல் 2013 வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 3,413,734 இற்கான நிலுவை தொகை ஒன்று காணப்பட்டதுடன் சபைக்கு சொந்தமான தகர்க்கும் ரோல் இயந்திரம் வாடகை கொடுப்பதன் மூலம் 2012 ஆண்டு தொடர்பாக ரூபா 867,225 தொகையும், மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 632,329 உம் ஆக கூட்டுத்தொகை ரூபா 1,499,554 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.4.6 முற்கொடுப்பனவுப் பணம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆண்டின் போது குறைந்த மதிப்பீட்டின் படி பழைய கடை உரிமையாளர்களுக்கு முற் கொடுப்பனவு அடிப்படையில் பெறுமதி மதிப்பீட்டு தொகையில் 50% இனை பணமாக செலுத்தி மீதித் தொகையை சமமான மாதாந்த தவணைப் பணமாக 24 தவணைகளின் மூலம் செலுத்துவதற்காக கூட்டு பெறுமதி ரூபா 16,500,262 இற்கு வழங்கியிருந்த கல்கமுவ பொதுச் சந்தை 22 கடைகள் தொடர்பாக வாடகையினை அறவீடுகளை பதிவு செய்வதற்காக முறையான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அக்காரணத்தினால் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையினை அறுதியாக இனங்காணக் கூடியதாக இருக்கவில்லை. எனினும் கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்ற தகவல்கள் மற்றும் பரிசோதனைகளின் பிரகாரம் ஒரே தடவையில் கிடைக்க வேண்டிய நூற்றிற்கு 50 வீத பணம் அடிப்படையில் 4 கடைகள் தொடர்பாக ரூபா 1,068,224 தொகையானது அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் தவணை பணமாக கிடைக்க வேண்டிய பணத்தில் இருந்து 18 கடைகள் தொடர்பாக தவணைப் பணம் 01 முதல் 22 இடையே வீச்சில் கூட்டுப் பெறுமதி ரூபா 4,653,657 இற்கான நிலுவையொன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஏப்ரல் மாதம் கேள்வி பெறுமதி ரூபா 9,614,664 இற்கான முற்கொடுப்பனவு தொகைக்கு வழங்கியிருந்த கல்கமுவ பொதுச் சந்தையின் 12 கடைகள் தொடர்பாக பணம் அறவீடு செய்தலை பதிவு செய்வதற்காக முறையான பதிவேடு ஒன்று பேணப்படாமையால் தொடர்ந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைத் தொகைகளை அறுதியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது எனினும் கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்ற தகவல்கள் மற்றும் பரிசோதனைகளின் பிரகாரமும் இதன் கீழ் 9 கடைகள் தொடர்பாக ரூபா 5,242,522 இற்கான நிலுவை ஒன்று இனங்காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் இவற்றில் 5 கடைகள் தொடர்பாக ரூபா 4,630,918 மொத்த தொகையும் நிலுவையாக காணப்பட்டது.

(இ) பெறுமதி மதிப்பீட்டு தொகையில் நூற்றிற்கு 50 தொகையின் செலுத்தி மீதித் தொகையினை சமமான 24 தவணைகளில் செலுத்துவதற்காக முற்கொடுப்பனவு அடிப்படையில் வழங்கியிருந்த குறைந்த பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 8,300,000 தொகைக்காக கல்கமுவ பஸ் நிலை நிலைய தரை மாடியில் 17 கடைகள் தொடர்பாக பொது கோவை முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. கடைகளை வழங்கப்பட்டிருந்த அடிப்படை, பணம் செலுத்த வேண்டிய திகதிகள் மற்றும் தொடர்புடைய ஏனைய போதிய தகவல்கள் கணக்காய்வின் போது இனங்காண

முடியாதிருந்தது. சபையில் காணப்பட்ட வாடகை அறவீட்டு விபரங்கள் மற்றும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 4 கடைகள் தொடர்பாக ஒரே தடவையில் பெற வேண்டிய நூற்றிற்கு 50 தொகையில் ரூபா 500,000 மற்றும் 16 கடைகள் தொடர்பாக தவணைப் பணமாக கிடைக்க வேண்டிய தொகையில் ரூபா 3,434,345 தொகையொன்றும் நிலுவையாக காணப்பட்டது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 03 தொலைபேசி செலுத்துகை டவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது ஒரு டவருக்காக ரூபா 227,360 இற்கான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அதே போல் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 1704 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான உபகரண செலவுகளுக்காக ரூபா 900,000 மற்றும் பராமரிப்பு தொழிலாளர் ஊதியாமாக ரூபா 32,400 ஆக மொத்தம் ரூபா 932,400 செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்காக திட்டமிட்டிருந்த ரூபா 195,000 பெறுமதியான 03 நலன்புரி விடயங்களும், ரூபா 23,600,000 பெறுமதியான 6 மூலதன விடயங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்கமுவ பொதுச் சந்தையில் அமைந்துள்ள 12 கடைகளில் 2012 ஆண்டின் போது முற்கொடுப்பனவு அடிப்படையில் வழங்கியிருந்த 9 கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த கடைகளுக்காக வாடகைக்கான பில் போடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2014 பெப்ரவரி 25 திகதிய கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் பிரகாரம் 4 கடைகள் வியாபார நடவடிக்கைகளுக்காக திறக்கபட்ட நிலையில் காணப்பட்டது என காணக்கூடியதாக இருந்தது. அதே போல் குறைந்த விலை கூறலின் கூட்டுத்தொகை ரூபா 13,544,235 இற்கான 3 கடைகளும் மீளாய்வாண்டு இறுதிவரை வாடகைக்குக் கொடுத்தல் அல்லது வேறு குறிப்பிட்ட வேலைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்கமுவ பஸ் நிலைய மேல் மாடியில் குறைந்த விலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 6,052,000 இற்கான 11 கடைகள் 2013 ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் கேள்விகள் கோரப்பட்டு முற்கொடுப்பனவு அடிப்படையில் வழங்கியிருந்ததுடன் குறைந்தவிலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 1,641,000 இற்கான 03 கடைகள் கேள்வி நடைமுறைப்படி வழங்கப்பட்டுள்ளவர் என உறுதியாக காணக்கூடியதாக இருக்கவில்லை. ரூபா 556,000 இற்காக வழங்கியிருந்த 01 இலக்க கடை தொடர்பாக ரூபா 356,000 தொகை ஒன்று 2013 திசெம்பர் 31 வரை நிலுவையாக காணப்பட்டது. 03 கடைகளுக்காக மாத்திரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் 05 கடைகளுக்காக கணக்காய்வு திகதி வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அதே போல் வாடகை மதிப்பீட்டு அறிக்கையின்

பிரகாரம் கடை ஒன்றிற்காக மாதாந்தம் ரூபா 1,100 வாடகை பில் போடுவதற்கு இயலுமாக இருந்த போதிலும் 2013 ஆண்டிற்காக கடை வாடகை பில் போடப்பட்டு அல்லது அறவீடு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்க முடியவில்லை.

(இ) கல்கமுவ பொது சந்தையின் முற்பக்கத்தில் காணப்பட்ட கடைகள், பொதுச் சந்தை நிர்மாணிக்கப்பட்ட உடன் அகற்றப்பட்டிருந்ததுடன் அவற்றில் 10 கடைகளுக்காக 2012 திசெம்பர் 31 வரை ரூபா 18,933 இற்கான நிலுவை கடைவாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. பொறுப்பு வாய்ந்த அலுவலர்களின் அங்கீகாரம் இன்றி அக்கடைகளில் நிலுவைகள் 2013 ஆண்டு கடை வாடகை பதிவேட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்தன. அதே போல் பஸ் நிலையம் (பழைய) 10 கடைகள் 2013 கடை வாடகை பதிவேட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதும் அவ்வாறு அகற்றுவதற்காக குறிப்பிட்ட காரணத்தை இனங்காண முடியாதிருந்தது. அத்துடன் அக் கடைகள் தொடர்பாக 2013 ஜனவரி 01 திகதி காணப்பட்ட ரூபா 34,480 நிலுவை தொகையையும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபையினால் 2009 – 2012 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 233 கட்டட விண்ணங்களில் மீண்டுவாண்டு வரை இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத 213 இடங்கள் காணப்பட்டன. அதே போல் தாமதக் கட்டணம் மற்றும் இணக்கச் சான்றிதழ் வழங்கும் போது அறவிப்பட வேண்டிய கட்டணம் பற்றிய ஏற்பாடுகள் சபையினால் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆண்டின் போது கல்கமுவ மாட்டிறைச்சிக் கடை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக அறவிடப்படவேண்டிய ரூபா 196,498 இற்கான நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக 2013 திசெம்பர் 27 திகதி கணக்காய்வு திகதி வரை கோரிக்கை பத்திரம் அனுப்புதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.3 செயற்பட்டு திறமையின்மை

--------------------------------------------

கல்கமுவ குளத்தில் உடற்பயிற்சி விடயங்களுக்காக உடற்பயிற்சி படகுகள் ஈடுபடுத்துவதற்காக 2013 ஆண்டிற்கான செயற்பாட்டு உதவியின் கீழ் ரூபா 500,000 உம் மற்றும் மீதித் தொகையை சபை நிதியத்தில் இருந்து செலவிட்டு ரூபா 637,975 பெறுமதிக்கு 4 உடற்பயிற்சி படகுகள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. குளத்தில் காணப்படும் பாசி ஏனைய செடி வகைகள் காரணமாக அப் படகுகளை குறிப்பிட்ட விடயத்திற்கு ஈடுபடுத்த முடியாமல் 05 மாதங்களை மிகைத்த காலம் முதல் படகுகளை திண்ம கழிவுப் பொருள் நிலைய வளவில் வைக்கப்பட்டிருந்தன. அந்த படகுகளின் கூரைகள் உக்கி அழிவு நிலையில் காணப்பட்டிருந்தன என 2014 பெப்ரவரி 25 மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுபாடு

-----------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் ரூபா 69,774,000 இற்கான மீண்டுவரும் வருமானம் ஒன்று மற்றும் ரூபா 135,587,000 இற்கான மூலதன வருமானம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், அவற்றில் நெருங்கியிருந்தது மீண்டுவரும் வருமானத்தில் நூற்றில் 80 ஆகிய ரூபா 56,414,000 உம் மற்றும் மூலதன வருமானத்தின் கீழ் நூற்றிற்கு 9 ஆகிய

ரூபா 11,900,000 உம் மாத்திரமே. அதே போல் சபையினால் உருவாக்கிய வருமானத்தின் கீழ் மதிப்பீட்டு வருமானம் ரூபா 20,965,000 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் அறவிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 11,138,000 ஆகும்.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்